## இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
## வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
## 30 அக்டோபர் 2015 / 17 முஹர்ரம் 1437

## நபி(ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்ளுதல்: சவாதுப்னு காஜியா (ரலி) வரலாற்றில் பெற வேண்டிய பாடங்கள்

اَلْحَمْدُ للهِ الَّذِي أَحَاطَ بِكُلِّ شَيْءٍ عِلْمًا وَقَضَى بِمَا يُرِيْدُ حِكْمَةً
وَ حُكْماً، أَنْعَمَ بِالنِعَمِ ابْتِلاَءً وَامْتِحَانًا، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللّهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه ذُوْ الْجَلاَلِ وَالإِكْرَامْ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا
مُحَمَّداً عَبْدُه وَرَسُوْلُهُ أَفْضَلُ الأَنَامِ وَ مِصْبَاحُ الظَّلاَمْ، اَللّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آله وَصَحْبِه وَسَلِّمْ تَسْلِيْماً
كَثِيْرًا .أَمَّا بَعْدُ فَيَا أَيُّهَا النَّاسُ اتَّقُوْا اللّهَ حَيْثُ مَا كُنْتُمْ، فَإِنَّ اللهَ
يَعْلَمُ سِرَّكُمْ وَ عَلاَنِيَّتَكُمْ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதன் மூலமும் அவன் நமக்குத் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது "தக்வா" (பக்தியை)

உச்சகட்டமாக ஏற்படுத்திக் கொள்வோமாக! அதன் மூலம் நாம் நமது ”ஈமான்” (இறை நம்பிக்கையைப்) பலப்படுத்திக் கொள்ளலாம். மேலும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா மற்றும் அவனது தூதர் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மீது அன்பு கொண்டவர்களாகவும் ஆகுவோம். இன்ஷாஅல்லாஹ்.

ஜமாஅத்தார்களே!

இம்மாதம் முழுவதும், பல நபித் தோழர்களின் வரலாறுகளை நாம் ஆராய்ந்து வந்தோம். அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் நாம் பாடங்களையும் முன்மாதிரிகளையும் பெற்று, அவற்றை நமது வாழ்க்கையில் பின்பற்ற வேண்டுமென்ற நோக்கில் அவ்வாறு செய்தோம். இன்று, மற்றொரு நபித்தோழரின் வரலாற்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்; அவர்களின் வரலாற்றில் கவனம் செலுத்துவதற்கும் நாம் நேரத்தை ஒதுக்குவது அவசியமாகும். நாம் அவர்களின் பெயரை அடிக்கடி கேள்விப்படாமலிருந்தாலும் அவர்களும் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் மீது ஆழமாக அன்பு கொண்டிருந்தார்கள். அவர்கள் தான் சவாதுப்னு காஜியா அல்-அன்ஸாரி (ரலி) ஆவார்கள்.

நமது பாசத்திற்குரிய ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள், எப்போதெல்லாம் தனது தோழர்களாகிய ஸஹாபாக்களின் வரிசையைச் சரி செய்வார்களோ அப்போது ஒரு அம்பைப் பயன்படுத்தி அதன் மூலம் சரி செய்வார்கள். ஒருமுறை, ஸஹாபாக்களுக்கிடையே நின்று கொண்டிருந்த சவாதுப்னு காஜியா (ரலி) அவர்களை ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் கடந்து சென்ற போது, சவாதுப்னு காஜியா (ரலி) வரிசையை விட்டும் சற்று அகன்று நிற்பதைக் கண்டார்கள். எனவே, அவரை வரிசையில் கொண்டு வருவதற்காக ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் தனது அம்பால் அவரைத்

தட்டினார்கள். ”சவாதுப்னு காஜியா அவர்களே! வரிசையில் நில்லுங்கள்” என்றும் கூறினார்கள். அப்போது சவாதுப்னு காஜியா (ரலி) அவர்கள்: ”இறைத்தூதர் அவர்களே! நீங்கள் உங்கள் அம்பால் எனக்கு காயத்தை ஏற்படுத்தி விட்டீர்கள்! (நான் உங்களிடம் பழிக்குப் பழி வாங்க விரும்புகிறேன்). அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா உங்களை நீதி, நேர்மையை நிலைநாட்ட அனுப்பியுள்ளான்” என்று கூறினார். எனவே, சவாதுப்னு காஜியா (ரலி), தன்னிடம் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்பதற்காக ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் தனது வயிற்றின் மீதிருந்த சட்டையை அவருக்குத் திறந்து காண்பித்தார்கள். அப்போது சவாதுப்னு காஜியா (ரலி) அவர்கள் உடனே ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் வயிற்றில் முத்தமிட்டார்கள். நீர் ஏன் இவ்வாறு செய்தீர்? என அவரிடம் ரசூலுல்லாஹி(ஸல்) கேட்ட போது: ”இறைத்தூதர் அவர்களே! நமக்கு முன்னால் இருக்கும் எதிரிப் படையை நீங்கள் காண்கிறீர்கள்; நான் இப்போரில் ஈடுபட்ட பின் உயிர் பிழைப்பேனா என்பது தெரியவில்லை; இது உங்களுடன் இருக்கும் இறுதி வாய்ப்பாக இருக்குமென நான் கருதுகிறேன்; எனவே, எனது தோல் உங்கள் தோலைத் தொட வேண்டுமென நான் விரும்பினேன்; இதற்காகவே இவ்வாறு செய்தேன்” என்று சவாதுப்னு காஜியா (ரலி) பதிலளித்தார்கள். ( நூல்: சீராஹ் இப்னு ஹிஷாம்)

மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே!

மேற்கண்ட வரலாறு, இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் மீது அவர்களின் தோழர்கள் கொண்டிருந்த ஆழமான அன்பைச் சுட்டிக் காட்டுகின்றது. எனினும், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களுடனான

அவர்களின் தொடர்பு, இறை நம்பிக்கையையும் ஆன்மீகத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவர்கள், ரசூலுல்லாஹி(ஸல்) மீது கொண்டிருந்த அன்பானது, அவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்டு வந்த பல்வேறு சவால்கள் மற்றும் சோதனைகளை எதிர்கொள்வதற்கும், சகிப்புத் தன்மையுடன் இருப்பதற்கும் அவர்களுக்கு உதவியாக இருந்தது. அந்த ஆழமான அன்பு, அவர்கள் தம்மை அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் பக்கம் நெருக்கமாக்கிக் கொள்ளவும் ஆர்வமூட்டியது. அந்த நபித் தோழர்கள், எவர்கள் கஷ்ட காலங்களில் மட்டும் அல்லாஹ்வின் பக்கம் திரும்புவார்களோ, கஷ்டங்கள் அகன்ற பின் அல்லாஹ்வைப் புறக்கணித்து மீண்டும் அலட்சியமாக ஆகி விடுவார்களோ அவர்களைப் போன்று இருக்கவில்லை. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "யூனுஸ்" எனும் அத்தியாயத்தின் 12-வது வசனத்தில் கூறுகின்றான்:

وَإِذَا مَسَّ ٱلْإِنسَٰنَ ٱلضُّرُّ دَعَانَا لِجَنۢبِهِۦٓ أَوْ قَاعِدًا أَوْ قَآئِمًا فَلَمَّا
كَشَفْنَا عَنْهُ ضُرَّهُۥ مَرَّ كَأَن لَّمْ يَدْعُنَآ إِلَىٰ ضُرٍّ مَّسَّهُۥ ۚ كَذَٰلِكَ زُيِّنَ
لِلْمُسْرِفِينَ مَا كَانُوا۟ يَعْمَلُونَ ﴿١٢﴾

பொருள்: மனிதனின் நிலை எவ்வாறு உள்ளதெனில், அவனுக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்தால், நின்றும், உட்கார்ந்தும், படுத்தும் நம்மிடம் பிரார்த்திக்கின்றான். ஆனால், நாம் அவனுடைய துன்பத்தை அவனை விட்டு நீக்கிவிடும் போது, அவன் தனக்கு ஏற்பட்டிருந்த துன்பத்தை அகற்றுவதற்காக எப்போதுமே நம்மிடம் பிரார்த்திக்காதவன் போல்

(கீழ்படியாமையின் பால்) சென்று விடுகின்றான்! வரம்பு மீறி நடப்பவர்களுக்கு அவர்களுடைய செயல்கள் இவ்வாறே அழகாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்வதானது நமது ஓரிறை நம்பிக்கையைப் பரிபூரணமாக்குகிறது. இறைத்தூதர்(ஸல்) நவின்ற ஹதீது ஒன்றை இமாம் புகாரி (ரஹ்) மற்றும் முஸ்லிம் (ரஹ்) தமது ஹதீதுக் கிரந்தங்களில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்கள்:

"எவரொருவர், தனது தகப்பனார், பிள்ளைகள் மற்றும் மனிதர்கள் அனைவரையும் விட என்னை அதிகமாக நேசிக்கவில்லையோ அவர் பரிபூரணமான இறை நம்பிக்கையாளராக ஆக மாட்டார்"

எனினும், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மீது நாம் அன்பு கொள்ளும் போது நம்மிடம் நேர்மையும் உளத்தூய்மையும் காணப்படுவது அவசியமாகும். பூமியில் சிலர், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்வதாகக் கருதுகிறார்கள். நீளமான அங்கிகளையும் ஜுப்பாக்களையும் அணிகிறார்கள். ஸலவாத்துக்களை சப்தமிட்டு சொல்கிறார்கள்; ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மீதான அன்பை வெளிப்படுத்தும் வகையில் சுவரொட்டிகளை ஒட்டுகிறார்கள். சிலர், "தாங்கள், சுன்னத்துக்கு நெருக்கமாக வாழ்கிறோம்; "பித்அத்" எனப்படும் மார்க்கத்திற்குப் புறம்பான செயல்களை விட்டும் தூரமாக இருக்கின்றோம்" என உருக்கமாகக் கூறுகிறார்கள். அவர்களின் தொழுகை, நோன்பு போன்ற வணக்க வழிபாடுகள் மூலம் அவர்கள் பக்திமிக்க மக்கள் என நினைக்கத் தோன்றுகிறது.

ஆனால், கவலைக்குரிய விஷயம் யாதெனில், அவர்களின் நடத்தைகள் அவர்களின் நிலையைப் பிரதிபலிக்கவில்லை என்பதாகும். அவர்கள் மற்றவர்களின் குறைகளை வெளிப்படுத்தி அவர்களின் மரியாதையைக் கெடுக்க நினைக்கின்றார்கள். அவர்களது குடும்பத்தார்களுடனான அவர்களின் உறவு நன்றாக இல்லை. தமது குடும்ப உறுப்பினர்களோடு அடிக்கடி சண்டையிடுகிறார்கள். தொழிற்கூடங்களில் மற்ற தொழிலாளர்களுடன் முரட்டுத்தனமாகவும் இரக்கமற்றும் நடந்து கொள்கிறார்கள். அண்டை வீட்டார்களுடன் கிருபையாக நடந்து கொள்ளாமல் பகைமையுணர்வுடன் காணப்படுகிறார்கள். இவ்விதமான நடத்தைகளைப் பற்றி எச்சரித்து இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ஹதீதில் பின்வருமாறு கூறியுள்ளார்கள்:

பிற்காலத்தில், ஜனங்களில் சிலர் தோன்றுவார்கள்; அவர்கள் திருக்குர்ஆனை ஓதுவார்கள்; அவர்களின் ஓதுதல்கள் அவர்களுக்கு உதவியாக இருக்குமென நினைப்பார்கள்; ஆனால், அது அவர்களுக்கு உதவியாக இருக்காது; மாறாக, தீங்கிழைக்கவே செய்யும். அவர்களின் தொழுகை அவர்களது தொண்டைக்குக் கீழே இறங்காது. (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

மேற்கண்ட ஹதீது, எவர்கள் வெளிப்படையில் அதிக மார்க்கப் பற்றுவர்களாகத் தென்படுகிறார்களோ, மார்க்க விஷயத்தில் அதிகப் பேணுதலுடையவர்களாக தம்மைக் கருதிக் கொள்கிறார்களோ, ஆனால், உண்மையில் அவ்வாறு இல்லையோ, எவர்களின் சமய உணர்வுடைமை ஷைத்தான் அவர்களை ஏமாற்றுவதற்கானச் சாதனமாக அமைந்து விட்டதோ அவர்களைச் சுட்டிக் காட்டுகின்றது. ஷைத்தான் அவர்களிடம்: தாமே அதிக மார்க்கப் பற்றுமிக்கவர்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி

கர்வம் கொள்ளுமாறும், மற்றவர்களை விட தாமே உயர்ந்தவர்கள் எனக் கருதுமாறும் தூண்டுகிறான். இந்த உணர்வுகள், தாம் இறைத்தூதர்(ஸல்) மீது அன்பு கொண்டுள்ளதாகவும், அவர்கள் பக்கம் நெருக்கமாக உள்ளதாகவும் கருதத் தூண்டும்; ஆனால், அவர்கள் உள்ரங்கமாக, ஆன்மீக ரீதியில் இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கு நெருக்கமாக இருப்பதில்லை. இறைத்தூதர்(ஸல்) அவர்களின் ”சுன்னத்” (வழிமுறையை) உளப்பூர்வமாகப் பின்பற்றுவதில்லை. எதையும் அல்லாஹ்வுக்காகச் செய்ய வேண்டும்; மற்றவர்களுக்குக் காண்பிப்பதற்காகவோ அல்லது மற்றவர்கள் தம்மை நல்லவர்கள் எனக் கூற வேண்டும் என்பதற்காகவோ செய்யக் கூடாது எனும் உணர்வு அவர்களிடம் காணப்படுவதில்லை.

இதன் விளைவாக, அவர்கள் வணக்க வழிபாடுகளை அதிகமாக நிறைவேற்றிய போதிலும், அவை அவர்களை, இறைத்தூதர்(ஸல்) அவர்களின் நன்னடத்தைகளுடன் கூடிய சிறந்த மனிதராக உருவாக்குவதில்லை. ஷைத்தானின் இம்மாதிரியான வலையில் சிக்குவதை விட்டும் நாம் கவனமாக இருக்க வேண்டும். இம்மாதிரியான நிலை யாருக்கும் ஏற்படலாம்; அவர் எவ்வளவு மார்க்கப் பற்றுமிக்கவராகவும், எந்த வகுப்பைச் சேர்ந்தவராகவும் இருந்தாலும் சரி.

அன்பிற்கினிய ஜமாஅத்தார்களே!

சன்மார்க்கத்தைச் செயல்படுத்துவதிலும், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் சுன்னத்தை (வழிமுறையைப்) பின்பற்றுவதிலும் நாம் நமது உள்ளங்களை பரிசுத்தமாக வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அல்லாஹ்வுக்காகவே அவற்றைச் செய்ய வேண்டும். ஹதீதுக் கலை

அறிஞரான ”ஷைக் நூருத்தின் அத்தைர்” என்பவர்: ”இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது உண்மையான அன்பை ஏற்படுத்திக் கொள்வதற்குப் பல வழிமுறைகள் உள்ளன” என்று கூறுகிறார்கள்:

**முதன்முதலாக**, ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் நமக்குப் போதித்துள்ள போதனைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதாகும். நமக்குத் தடை செய்யப்பட்டுள்ள அனைத்து விஷயங்களை விட்டும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிற்காக நாம் தவிர்ந்திருக்க வேண்டும்.

**இரண்டாவதாக**, இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் ஹதீதையும் அதிகம் படிக்க வேண்டும்.

**மூன்றாவதாக**, ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மீது அதிகம் ஸலவாத்துச் சொல்ல வேண்டும்.

**நான்காவதாக**, இறைத்தூதர்(ஸல்) அவர்களை, நாம் இவ்வுலகில் உயிருடன் இருக்கும் போது நமது கனவிலோ அல்லது மறுமையிலோ சந்திப்பதற்கு தொடர்ந்து அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருக்க வேண்டும்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

செய்யிதினா சவாதுப்னு காஜியா (ரலி), ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பானது பரிசுத்தமான அன்பாகும். அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையையும் பக்தியையும் அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்விதமான அன்பு அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் புறத்திலிருந்து அருளப்படுவதாகும். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மீதான இவ்விதமான அன்பு நமக்கும் கிடைக்காது என்பதல்ல; எனினும் அதற்காக

நாம் முயற்சி செய்வதும் உளப்பூர்வமான தியாகங்கள் புரிவதும் அவசியமாகும்.

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் தூதையும் அவர்களின் செயல்பாடுகளையும் ஆர்வத்துடன் பின்பற்றுவதன் மூலம் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மீது எப்போதும் உண்மையான அன்பு கொள்கின்ற உம்மத்தினராக நாம் ஆகுவோமாக! மறுமையில் அவர்களது ”ஷ*ஃ*பாஅத்” (சிபாரிசு) கிடைக்கப் பெறுவோமாக! அதன் மூலம் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் பார்வையில் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றவர்களாக ஆகுவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.